பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 26 செவ்வாய்க்கிழமை 10.05.2022 கதிர் 79

## கடும் இராணுவப் பாதுகாப்புடன் அலரிமாளிகையை விட்டு வெளியேறினார் மஹிந்த

– சிகிச்சை என்ற பெயரில் வெளிநாடு செல்ல ஏற்பாடு



முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அலரிமா ளிகையிலிருந்து வெளியேறி யுள்ளார். ☞2

## நாடாளுமன்றத்தை உடன் கூட்டுங்கள்!

ஜனாதிபதியிடம் சபாநாயகர் கோரிக்கை

நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மற்றும் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கே நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றம் எதிர்வரும் 17ஆம் திகதியே கூடவிருந்தது. எனினும், நாட்டில் வன்முறை வெடித்துள்ளதால், முன்கூட்டியே கூட்டுமாறு கோரப்பட்டுள்ளது. விசேட நாடாளுமன்ற அமர்வைக் கூட்டுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது.

## நேற்றைய சம்பவங்களில் 8 பேர் பலி; 400 பேர் காயம்

நாடாளாவிய ரீதியில் நேற்று மதியம் முதல் பதிவான அமைதி யின்மை – மோதல் சம்பவங் களின்போது, ஆளுங்கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 8 பேர் இதுவரை உயி ரிழந்துள்ளனர். போராட்டக்காரர் கள் உட்பட 400 இற்கும் மேற் பட்டோர் ☞2



# திருமலை கடற்படை முகாமுக்குள் மஹிந்த குடும்பம் தங்கவைப்பா?



மக்கள் அணிதிரண்டு போராட்டம்

திருகோணமலையில் உள்ள கிழக்கு கடற்படைத் தலைமையகம் முன்னால் இன்று ஒன்றுகூடிய மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். ☞2

## மஹிந்தவை உடன் கைதுசெய்க!

– பொலிஸ்மா அதிபரிடம் சட்டத்தரணிகள் கோரிக்கை



கொழும்பில் 'மைனா கோ கம' மற்றும்'கோட்டா கோ கம' போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல் மேற் கொள்வதற்குத் திட்டங்களை வகுத்துக்கொடுத்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை உடனடியாகக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை மேற்கொள் ளுமாறு சட்டத்தரணிகள் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.


கொழும்பு பிரதான நீதி வான் நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் வைத்து சட்டத் ☞2

## இராணுவ ஆட்சிக்கு வாய்ப்பு

– சந்திரிகா எச்சரிக்கை

நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளன என முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் தெரி விக்கையில், ஜனநாயக ஆட்சிக்காகவும், ☞2



## ஆளுங்கட்சியின் 25 இந்கும் மேற்பட்ட பிரமுகர்களின் வீடுகள் தாக்கி எரிப்பு

ஆளுங்கட்சியின் 25 இற்கும் மேற்பட்ட அரசியல் பிரமுகர்களின் வீடுகள் மக்களால் நேற்றிரவு அடித்து நொறுக்கப்பட்டு எரியூட் டப்பட்டன.

கொழும்பில் 'மைனா கோ கம', 'கோட்டா கோ கம' ☞2



## நாளை விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம்!

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாளை விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் ☞2

## விமான நிலையத்தில் மக்கள் கண்காணிப்பு



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையில் ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர் கள் வெளிநாடு ☞2




## பஸிலின் வீடும் எரிக்கப்பட்டது

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்குச் சொந்தமானது எனக் கருதப்படும் மல்வானை வீடு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

## போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்த சிறைக் கைதிகள் களமிறக்கப்பட்டனரா?

58 பேர் காணவில்லை எனத் தகவல்

காலிமுகத்திடல் போராட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்து வதற்கு , அரச அனுசரணையுடன் சிறைக்கைதிகள் பயன்படுத் தப்பட்டுள்ளனர் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ☞2



## கொழும்பில் இடம்பெற்ற மோதல்களில் ஒரு பொலிஸ் உட்பட இருவர் உயிரிழப்பு

218 பேர் வைத்தியசாலையில்

கொழும்பில் நேற்று இடம் பெற்ற மோதல்களில் அலரிமா ளிகையில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் உட் பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

218 பேர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் என்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலை அறிவித்துள்ளது.

### இராணுவ ஆட்சி .......

நீதிக்காகவும் அமைதியான முறையில் போராட்டங்கள் நடத்தப்பட்டு வரும் நிலையில், நாட்டில் வன்முறைச் சம்பவங்கள் தூண்டப்பட்டு, இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படலாம்.

இந்நிலைமையில், மக்கள் அமைதியைப் பேணவேண்டும் – என்றார்.

### ஆளுங்கட்சியின் .......

அறவழிப் போராட்டக்காரர்கள் மீதும், அவர்கள் அமைத்திருந்த கூடா ரங்கள் மீதும் ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள் நேற்று தாக்குதல் மேற்கொண்டதையடுத்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் மக்களின் போராட்டங்கள் வெடித்தன.

மக்களின் கோபாவேசத்தின் வெளிப்பாடாக வீரகெட்டிய – மெதமுலனவில் உள்ள ராஜபக்ஷ குடும்பத்தின் பூர்வீக இல்லமும் கொளுத்தப்பட்டது. அத்துடன் ராஜபக்ஷக்களின் பெற்றோரின் கல்லறையும் அடித்து நொறுக்கப்பட்டது.

ஜோன்சன் பெர்னாண்டோ, பந்துல குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, சனத் நிஷாந்த, திஸ்ஸ குட்டியாரச்சி, விமல் வீரவன்ஸ, பிரசன்ன ரணதுங்க, ரமேஷ் பத்திரண, சாந்த பண்டார, அருந்திக்க பெர்னாண்டோ, கனக ஹேரத், மஹிபால ஹேரத், காமினி லொக்குகே, நிமல் லான்சா, பிரசன்ன ரணவீர, ரோஹித அபேகுணவர்தன, எஸ்.எம். சந்திரசேன, சன்ன ஜயசுமன உட்பட 25 இற்கும் மேற்பட்ட ஆளுங்கட்சி அரசியல் பிரமுகர்களின் வீடுகள் சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. அவர்களுக்குச் சொந்தமான சில ஹோட்டல்களும் அடித்து நொறுக்கப்பட்டன.

இவை தவிர குருநாகல் மேயர், மொரட்டுவ மேயர் உட்பட ஆளுங்கட்சி உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் பலரின் வீடுகளும் எரிக்கப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் நடக்கும்போது பாதுகாப்புக்காக இருந்த பொலிஸார் தப்பியோடினர். பல இடங்களில் தற்பாதுகாப்புக்காகப் பொலிஸார் மக்களுடன் முரண்படவில்லை. இதேவேளை, கொழும்பு – காலி முகத்திடலுக்கு அரச வன்முறையாளர்களை அழைத்து வந்த பஸ்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொலிஸார் ஆகியோரின் வாகனங்களும் மக்களால் சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. அநுராதபுரத்தில் உள்ள ராஜபக்ஷக்களின் நம்பிக்கைமிகு மந்திரவாதியான 'ஞான அக்கா' என்றழைக்கப்படும் ஞானவதியின் வீடும், அவருக்குச் சொந்தமான ஹோட்டலும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

### நேற்றைய......

காயமடைந்துள்ளனர். நிட்டம்புவையிலும், வீர கெட்டியவிலும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. காயமடைந்தவர்களில் சிலர் அவசர சிகிச்சைப்பிரிவுகளில் சிகிச்சைபெறுகின்றனர்.

### கடும் இராணுவப் .......

கடும் இராணுவப் பாதுகாப்புடன் அலரிமாளிகையை விட்டு இன்று காலை அவர் வெளியேறியுள்ளார். அவர் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கடந்த ஒரு மாதகாலமாக மக்கள் போராட்டம் இடம்பெற்று வந்த நிலையில், ஆளுங்கட்சியினரால் நேற்றுவன்முறைகட்டவிழ்த்துவிடப்பட்ட நிலையில் பிரதமர் பதவியிலிருந்து மஹிந்த விலகினார்.

இந்நிலையில், அலரிமாளிகையில் இன்று அவர் வெளியேறினார்

### நாளை விசேட .......

கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு சபாநாயகர் இன்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையிலேயே, நாளை கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### திருமலை .......

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அவரின் குடும்பத்தினர் அங்கே தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று வெளியான தகவல்களையடுத்தே மக்கள் அங்கே கூடினர்.

கொழும்பிலிருந்து விசேட ஹெலிக்ஹொப்டர் மூலம் மஹிந்த உள்ளிட்ட அவரின் குடும்பத்தினர் இன்று காலை குறித்த முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் பரவின.

இதையடுத்து மஹிந்த குடும்பத்தினர் உள்ளே இருந்தால் வெளியே அனுப்ப வேண்டும் என்றும், அவர்களை அங்கிருந்து வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல விடக் கூடாது என்றும் வலியுறுத்தி மக்கள் முகாமுக்கு முன்னால் அணி திரண்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

### விமான நிலைய .......

களுக்குத் தப்பிச் செல்லத் திட்டமிட்டுள்ளனர் என்று வெளியான தகவல்களையடுத்து விமான நிலையங்களுக்கு அருகில் மக்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்லும் பிரதான நுழைவாயில் உள்ளிட்ட இடங்களில் பிரதேசவாசிகள் இன்று காலை தொடக்கம் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்த வழியால் விமான நிலையத்துக்குள் செல்லும் அனைத்து வாகனங்களையும் பரிசோதிக்கும் அவர்கள் உள்ளே யார் இருக்கின்றார்கள் என்று சோதனையிட்ட பின்னரே அனுப்பிவைக்கின்றனர்.

இதேவேளை, கொழும்பு இரத்மலானை விமான நிலையம், மத்தளை விமான நிலையம் ஆகிய பகுதிகளிலும் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

### மகிந்தவை .......

தரணி குணரத்ன வன்னிநாயக்க இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இதேவேளை, ஜனாதிபதியும் பிரதமர் உட்பட அரசும் உடனடியாகப் பதவி விலக வேண்டும் எனக் கோரி தன்னெழுச்சியாகக் காலிமுகத்திடலிலும் அலரி மாளிகையின் முன்னும் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுத்து வந்தவர்கள் மீது நேற்றுத் தாக்குதல் நடத்தியவர்கள் மற்றும் ஏற்பாடு செய்து இவர்களைக் கொழும்புக்கு அழைத்து வந்தவர்கள் ஆகியோருடன் நேற்று பிரதமர் பதவியை இராஜினாமா செய்த மஹிந்த ராஜபக்சவையும் கைதுசெய்து சட்டத்தின் முன்பு நிறுத்த வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### போராட்டக்.......

எனினும், இந்த குற்றச்சாட்டை சிறைச்சாலை ஆணையாளர் மறுத்துள்ளார்.

சிறைச்சாலைபுனர்வாழ்வு முகாமுக்கு நிர்மாணப் பணிகளுக்கான பயிற்சி நடவடிக்கைகளுக்காக சிறைக் கைதிகளை ஏற்றிச் சென்ற பஸ் மீது நேற்றிரவு குழுவொன்று தாக்குதல் நடத்தி இருந்தது.

இந்நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலின்போது 58 கைதிகள் காணாமல்போயுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

மேலும், நேற்றுக் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்காகக் கைதிகள் அனுப்பி வைக்கப்பட்டனர் என்று வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் குறிப்பிட்டார்.

குறித்த கைதிகளைக் கண்டறியும் நடவடிக்கையில் தற்போது சிறைச்சாலை அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் மேலும் கூறினார். ஆனால், சிறைச்சாலையிலிருந்து இந்தப் போராட்டத்துக்காகத் தாங்கள் குறிப்பிட்ட ஒரு நபரால் அழைத்து வரப்பட்டனர் என, ஒரே நிறத்தில் ஒரே மாதிரியான டிரவுஸர் அணிந்த – சிறைக் கைதிகள் எனக் கருதப்படும் – ஏழெட்டுப் பேர் வரிசையாக நிலத்தில் அமரவைக்கப்பட்ட நிலையில், அவர்களை விசாரித்த பொதுமக்களிடம் ஒப்புதல் வாக்குமூலமளிக்கும் காணொலி வைரலாகப் பரவி வருகின்றது.

## பொலிஸ்மா அதிபர், இராணுவத் தளபதி மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அழைப்பு



பொலிஸ்மா அதிபர் மற்றும் இராணுவத் தளபதி ஆகியோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு இருவருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சட்டவாட்சியை உறுதிப்படுத்த முடியாமல் போனமை தொடர்பில் அதிகாரிகள் இருவரிடமும் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளயிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பிரதேச சபை தலைவர் தாக்குதலில் உயிரிழப்பு



ஆளுங்கட்சி பிரமுகரான இமதுவ பிரதேச சபையின் தலைவர் ஏ.வி.சரத்குமார தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

அவரது இல்லத்தின் மீது அரசுக்கு எதிரான போராட்டக் குழுவினர் நேற்றிரவு தாக்குதலை மேற்கொண்டிருந்த நிலையில், அதில் அவர் படுகாயமடைந்திருந்தார்.

அதன்பின்னர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி இன்று அவர் உயிரிழந்துள்ளார்.

## மூன்று இளம் சகோதரர்களை அளம்பில் கடலில் காணோம்!

*(ந.லோகதயாளன்)*

*யாழ்ப்பாணம், மே.10*

*முல்லைத்தீவு மாவட்டம் அளம்பிலை சேர்ந்த 9 இளைஞர்கள் கடலில் நீராடச் சென்ற சமயம் மூவரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*அளம்பிலைச் சேர்ந்தவர்கள் செம்மலை பிள்ளையார் கோயிலுக்கு நேரேயுள்ள கடலில் இன்று மதியம் நீராடிய சமயமே 3 இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர்.*

*அளம்பிலை சேர்ந்த பத்மநாதன் விஸ்வநாதன் (29), பத்மநாதன் விஜித் (26), பத்மநாதன் விழித்திரன் (22) ஆகிய ஒரே குடும்பத்தை சேர்ந்த சகோதரர்களே அலையில் அடித்து செல்லப்பட்டு காணாமல் போயுள் ளனர்.*

*இவ்வாறு காணாமல் போனவர்களை கண்டறிவதற்காக கடற்றொழிலாளரின் மாவட்ட சமாசத்தின் உதவி நாடப்பட்டுள்ளது.*

*இந்த சம்பவத்தை அடுத்து பெருமளவான மக்கள் செம்மலை கடற்கரை பகுதியில் குவிந்துள்ளமையோடு பொலிஸார் விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர்.*

*தாழமுக்கம் காரணமாக கடல் மிகவும் கொந்தளிப்பாக காணப்படுவதால் தேடுதல் முயற்சிகள் எவையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.*

## வீரவன்ஸ வீடும் தாக்கப்பட்டது

விமல் வீரவன்ஸவின் வீடும் நேற்றிரவு தாக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## சிரேஷ்ட டி.ஐ.ஜியும் வாங்கிக் கட்டினார்



மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொழும்பு கங்காராமையில் அவர் வந்த வாகனத்தை மறித்த ஒரு குழுவினர் அவரை ஓட ஓட நையப்புடைத்தனர். தாக்குதலில் அவர் காயமடைந்துள்ளார்.

பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரை மீட்டனர்.

காலிமுகத்திடலில் போராட்டக்காரர்களை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் நேற்று தாக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட படங்களில் பெரமுனவின் அரசியல்வாதிக்கு ஆதரவளித்த தேசபந்து தென்னகோனின் படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000 மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## மக்கள் புகட்டும் பாடம்

மக்களின் கருத்து நிலையைத் தமது கவனத்தில் எடுக்காத – தமது திமிர்த்தனத்தினால் அந்தக் கருத்து நிலையை உதாசீனப்படுத்தி, புறம்தள்ளி நடக்கின்ற – அரசியல்வாதிகளின் நிலைமை என்னவாகும் என்பதற்கு சரியான பாடத்தை தென்னிலங்கை மக்கள் இப்போது போதித்து வருகிறார்கள்.

நாட்டின் பழுத்த அரசியல்வாதியான மஹிந்தராஜபக்ஷவுக்கும் கூட இப்போதுதான் பட்டறிவில் இதை உறைப்பாக உணரும் அந்த வாய்ப்பு வந்திருக்கின்றது எனலாம்.

இனிமேலும், 2019 இல் நடந்த தேர்தலில் பெற்ற அறுபத்தி ஒன்பது லட்சம் வாக்குகள் குறித்தும், 2020 பொதுத் தேர்தலில் பெற்ற மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை பற்றியும் பிரபலாபித்துக்கொண்டு மக்களின் காதில் பூ சுற்றும் வேலை சரி வராது என்பதை – தங்கள் பருப்பு அவியாது என்பதை – ராஜபக்ஷக்கள் ஐயந்திரிபற உணர்ந்திருப்பார்கள் எனக் கருதலாம்.

அந்த வாக்களிப்புகளும் அவற்றின் மூலம் தாங்கள் பெற்ற மக்களின் ஆணையும் தங்களின் நடத்தைகளினால் காலாவதியாகிவிட்டன என்பதை நம்முடைய அரசியல்வாதிகள் இப்போது நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்பலாம்.

மக்கள் வாக்களித்து விட்டார்கள், அடுத்த ஐந்து வருடங்களுக்கு அவர்கள் நம்மை ஒன்றும் செய்ய முடியாது, ஏமாளிகளாகப் பார்த்திருக்க வேண்டியதுதான் என்று எண்ணி அரசியல் படம் போடும் நமது பிரமுகர்களுக்கு இப்போது சரியான பாடம் கற்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

ஒரு கட்சியில் தேர்தலில் நின்று நாடாளுமன்றுக்குத் தெரிவானதும், பின்னர் பேரம் பேசி, சுளையாக வாங்கிக் கொண்டு ஆளும் தரப்புக்குக் குத்துக்கரணம் அடித்து வாக்களிப்பது என்று மக்களின் காதில் பூச்சுற்றுபவர்களுக்கு மக்கள் இப்போது உரிய பாடம் புகட்டத் தொடங்கி இருக்கின்றார்கள். அதிகாரப் பதவிகளைக் கையில் வைத்துக்கொண்டு, அதிரடி அட்டகாசம் புரியும் அரசியல்வாதிகளுக்கு அதே மொழியில், அதே வழியில், அதே பாணியில், உண்மைப் பாடத்தைப் புகட்ட முனைந்திருக்கும் மக்கள் மிகவும் மெத்தப்படித்த புத்திசாலிகள்தான்.

அரசியல் பதவிகளை வைத்துக்கொண்டு ஊழல், மோசடிகளைப் புரிவோரை, கையூட்டு பெறுபவர்களை மக்கள் நன்கு புரிந்து கொண்டு விட்டார்கள்.

தேடித்தேடி நடைபெறும் வன்முறைகள் மக்கள் தமது உணர்வெழுச்சியிலிருந்து கீழே இறங்கவில்லை என்பதைக் காட்டும் அளவீடுகள்.

மக்கள் இவ்வளவு நாளும் பொறுமையாக இருந்தார்கள். இப்போது சாதுவுக்கு கோபம் கொண்டால் காடு கொள்ளாது – இந்த நாடு கொள்ளாது – என்பதைக் காட்டி வருகின்றார்கள்.

அதற்காக மக்கள் இப்போது எடுத்திருக்கும் வன்முறைப் பாதை – சட்டத்தைக் கையிலெடுக்கும் மார்க்கம் – சரி என அங்கீகரிக்கிறோம், அதைத் தூண்டுகிறோம் என்று யாரும் கருதி விடக் கூடாது. மக்களின் இந்த உணர்வெழுச்சிச் சீற்றத்தில் புதைந்து கிடக்கும் நியாயத்தை – உண்மையை – கருத்தை – கவனத்தில் எடுக்க மறுத்துத் திமிர்த்தனமாக நடந்த அரசியல்வாதிகளே இந்நிலைமைக்கு முழுப் பொறுப்பும்.

அரசியல்வாதிகள் தாங்கள் மட்டுமல்லர், தங்களோடு சேர்ந்தவர்களையும் சரிவர வழிநடத்தாவிட்டால் சேர்ந்து வாங்கிக் கட்ட வேண்டியதுதான் என்பதைப் பட்டுத் தெளியும் நிலைமை வந்திருக்கின்றது. எல்லா அரசியல்வாதிகளுக்கும் இது நல்ல பாடம்.

# நாட்டை விட்டுத் தப்பி ஓட கோட்டா, மஹிந்த திட்டம்!

## தயார் நிலையில் 5 விமானங்கள் என்கிறது இந்திய ஊடகம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தமது குடும்பத்தினருடன் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடக் கூடும் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக கொழும்பில் ஐந்து விமானங்கள் தயார் நிலையில் இருக்கின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையில் தேன்கூட்டில் கையை விட்ட கதையாக ராஜபக்ஷ சகோதரர்கள் விழிபிதுங்கி போயுள்ளனர். கொழும்பு காலிமுகத்திடலில் 30 நாள்களாக அரசுக்கு எதிராக அமைதி வழியில்தான் மக்கள் போராடினர். சிறிதும் வன்முறையில்லாமல் இலங்கை அரசு பதவி விலகக் கோரி போராட்டம் நடத்தப்பட்டது.

இதனால் நெருக்கடிக்குள்ளான மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். அதற்கு முன்னதாக கொழும்பு காலிமுகத் திடலில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது கொடூர தாக்குதல் கட்டவிழ்த்து விடப்பட்டது.

ராஜபக்ஷவின் ஆதரவாளர்களின் வன்முறை வெறியாட்டம் பொதுமக்களை கடும் அதிர்ச்சி அடைய வைத்தது. இதனையடுத்து ராஜபக்ஷ ஆதரவாளர்களை திருப்பி தாக்கி விரட்டியடித்தனர் பொதுமக்கள்.

இது தென்னிலங்கை முழுவதும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது.

இலங்கையில் ராஜபக்ஷ ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் என பலரது வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டு வருகின்றன.

இதனால் ராஜபக்ஷ ஆதரவு அரசியல்வாதிகள் அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளனர். இதனிடையே தலைநகர் கொழும்பில் எந்த நிமிடத்திலும் புறப்படுவதற்கு தயார் நிலையில் 5 விமானங்கள் தயாராக உள்ளன. இந்த விமானங்களை இயக்க 8 விமானிகளும் தயாராக உள்ளனர் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை பொதுமக்களின் உக்கிரத்தை எதிர்கொள்ள முடியாமல் ராஜபக்ஷ சகோதரர்கள் தங்களது குடும்பத்தினருடன் வெளிநாட்டுக்கு தப்பி செல்லப் போகின்றனரா? என்கிற கேள்வியும் எழுந்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வன்முறையில் ஈடுபடாமல் அமைதியாக செயற்படுக!

## மக்களுக்கு சட்டத்தரணிகள் சங்கம் அறிவுறுத்து

முக்கியமான தருணங்களில் வன்முறையில் ஈடுபடாமல் அமைதியாக இருக்குமாறு பொதுமக்களிடம் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கேட்டுள்ளது.

வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுத்து வருவதாக ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

'காலி முகத்திடலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த சம்பவத்துக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். அதற்கான அனைத்து முயற்சிகளையும் சட்டத்தரணிகள் சங்கம் மேற்கொண்டு வருகிறது. அந்த மக்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்.

வன்முறையை அனைவரும் தவிர்க்க வேண்டும். துன்புறுத்தல், காயம் ஏற்படுத்துதல், பொது சொத்து மற்றும் தனியார் சொத்துக்களை சேதப்படுத்துதல் முற்றிலும் சட்டவிரோதமானது. அவற்றை அங்கீகரிக்கவே முடியாது.

இது தொடர்பாக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். துன்புறுத்தல் மற்றும் சொத்துக்களை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முழுமையாக ஆதரவளிக்கிறது' என ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

# காலிமுகத் திடல் வன்முறையின் பின்னணியில் சிறைக் கைதிகளும், சமுர்த்தி பயனாளிகளும்!

## கைதான குண்டர்கள் வாக்குமூலம்

அரசாங்கத்துக்கு எதிராக அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்த போராட்டம் வன்முறையாக மாறியுள்ளது. கடந்த ஒரு மாத காலமாக அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் மிகவும் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த போராட்ட களத்தில் குண்டர்கள் களமிறங்கி போராட்டகாரர்கள் மீது கொடூரமாகத் தாக்குதல் நடத்தியிருந்தனர். அரசாங்கத்திற்கு ஆதரவானவர்களே தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இதனால் கொழும்பில் வன்முறை வெடித்தது. இந்நிலையில், அரச ஆதரவாளர்கள் என்று கூறிக்கொண்டு அமைதியாக போராட்டம் நடத்தியவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை மக்கள் தாக்கத் தொடங்கினர். அவர்களை அழைத்து வந்த வாகனங்கள் தாக்கப்பட்டதுடன், தீ வைக்கப்பட்டன. வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட குண்டர்கள் மீது மக்கள் தாக்குதல் நடத்தினர். அரசாங்கத்தின் முக்கிய நபர்களின் வீடுகள் தீ வைக்கப்பட்டுள்ளன.

வாகனங்களும் எரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே, குறித்த வன்முறை சம்பவங்களுக்காக சிறையிலிருந்து கைதிகள் அழைத்து வரப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான குண்டர்கள் வழங்கிய வாக்குமூலத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சமுர்த்தி பயனாளர்களும் அச்சுறுத்தி அழைத்து வரப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அணு ஆயுதங்களை முழுவதுமாக வடகொரியா கைவிட வேண்டும்



## தென் கொரியாவின் புதிய அதிபர் பேச்சு

தென் கொரியாவின் புதிய அதிபராக பொறுப்பேற்றுள்ள யூன் சுக்-யியோல் வடகொரியா அணு ஆயுதங்களை கைவிட்டு அமைதி பாதைக்கு திரும்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். தென்கொரியாவின் மக்கள் சக்தி கட்சியின் சார்பாக யூன் சுக்-யியோல் தென்கொரியாவின் புதிய அதிபராக அடுத்த 5 ஆண்டுகளுக்கு பதவி வகிக்கவுள்ளார். சியோல் நகரில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சிக்கு பிறகு பேசிய அவர் அணுஆயுத ஏவுகணை சோதனைகளை கைவிட்டு அமைதிப்பாதைக்கு வடகொரியா திரும்பினால் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி செய்ய தென்கொரியா தயாராக இருப்பதாக தெரிவித்தார்.

வடகொரியா அணுஆயுதங்களை தாங்கி செல்லும் ஏவு கணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்துவருகிறது. அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை அச்சுறுத்தும் வகையிலேயே இந்த ஏவுகணை சோதனைகளில் வடகொரியா ஈடுபட்டு வருகிறது.

# மரியுபோல் நகரை கைப்பற்றுவதற்கு தீவிரம்தாக்குதலை தீவிரப்படுத்தியது ரஷ்யா



ஜேர்மனியின் நாசி படை மீதான வெற்றி தினத்தை ரஷ்யாகொண்டாடிய நிலையில், முக்கிய தெற்கு துறைமுக நகரமான மரியு போலைக் கைப் பற்றும் முயற்சியில் ரஷ்யப் படைகள் உக்ரைன் மீது தொடர் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இரண்டாம் உலகப் போரில் ஜேர்மனியின் நாசி படையை வென்றதன் அடையாளமாக, ஒவ்வொரு ஆண்டும் மே 9ம் திகதியை வெற்றி தினமாக ரஷ்ய ராணுவம் கொண்டாடி வருகிறது. உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் 11வது வாரமாக தொடரும் நிலையில், இந்த வெற்றி தினம் நேற்று கொண்டாடப்பட்டது. உக்ரைனின் முக்கிய துறைமுக நகரான மரியுபோலில் கடற்கரை பகுதியில் 2,000க்கும் மேற்பட்ட உக்ரைன் ராணுவ வீரர்கள் பதுங்கி இருந்த இரும்பு ஆலை மீது ரஷ்ய படைகள் மீண்டும் தொடர் தாக்கு தலை நடத்தி வருகின்றன என உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

மரியுபோலில் உள்ள இந்த இரும்பு ஆலை மட்டுமே ரஷ்யாவி னால் கைப்பற்றப்பட முடியாத பகுதி யாக இருந்து வருகிறது. முக்கிய துறைமுக நகரான இதனை கைப்பற்றி விட்டால், உக்ரைனிடம் இருந்து கடந்த 2014ம் ஆண்டிற்கு கைப்பற்றிய கிரீமியா தீபகற்பத்திற்கு தரைவழி மார்க்கத்தை ரஷ்யா உருவாக்க வழிபிறக்கும். இதனால், இதனை விட்டு கொடுக்க விரும்பாத உக்ரைன் படைகள் கடைசி வரை போராடி வருகின்றன. ரஷ்யா கெடு விதித்த பிறகும் அவர்கள் இறுதி மூச்சு உள்ள வரை போராட போவ தாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வீடியோ மூலம் அப்படையின் துணை தளபதி ஸ்வியாடோஸ்லாவ் கலீனா பலாமர் கூறுகையில், "இரும்பு ஆலை மீது ரஷ்ய படையினர்தொடர் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.இரும்பு ஆலை பதுங்கு குழிக்குள் பதுங்கி உள்ளவர்களிடம் தேவையான உயிர்காக் கும் உபகரணங்கள் இல்லை. சரணடைவது என்பது கொஞ்சம் கூட ஏற்றுக்கொள்ள முடியாதது. ஏனென்றால், எதிரிக்கு அதை பரிசாக வழங்க கூடாது," என்று தெரிவித்தார். ஐ.நா, செஞ்சிலுவை சங்கத்தினரின் உதவியுடன் அங்கிருந்த மக்கள் வெளியேற்றப்பட்டுள்ள நிலையில், அங்கேயே இறுதி மூச்சுவரை போராட போகிறோம் என அசோவ் படையினர் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவில் நடந்த வெற்றி தின ராணுவ அணிவகுப்பில் உரையாற்றிய அதிபர் புடின், "ரஷ்ய எல்லைகள் மீதான பாதுகாப்பு அச்சுறுத்தல் முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாதது. ரஷ்யா மீது தாக்குதலை தொடர உக்ரைன் திட்டமிட்டுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல், நேட்டோவில் இணையக் கூடாது என்ற ரஷ்யாவின் வேண்டுகோள்கள் புறக் கணிக்கப்பட்டதால் தான் உக்ரைன் மீது போர் தொடுக்க வேண்டியதாயிற்று," என்று கூறினார்.

டான்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யா நடத்திய குண்டுவீச்சில் பள்ளிகட்டடம் இடிந்து விழுந்ததில் அங்கு அடைக்கலம் புகுந்திருந்த 90 பேரில் 2 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன. 30 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இதனால் 60க்கும் மேற் பட்ட வர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட வீடியோவில், "2ம் உலகப் போரின் போது நமது முன்னோர்கள் என்ன செய்தனர் என்பதை மறந்திருக்க மாட்டோம். அப்போது, ஏறக்குறைய 8 லட்சம் உக்ரைனியர்கள் உயிரி ழந்தனர்.

அந்த போரில் மொத்தம் 5 கோடி பேர் உயிரிழந்தனர். அது திரும்ப நிகழ வேண்டாம். நமக்கு இனிமேல் 2 வெற்றி தினங்கள் வரும். சிலருக்கு ஒரு வெற்றி தினம் கூட இல்லாமல் போகும். அன்று வென்றோம்; இன்று வெல்வோம்," என்று கூறியுள்ளார்.

# பெண்கள் புர்கா அணிவது கட்டாயம்; ஐ.நா. பொதுச் செயலாளர் கவலை



ஆப்கானிஸ்தானில் பொது இடங்களில் பெண்கள் புர்கா அணிவதை தாலிபான் அரசு கட்டாயமாக்கியது குறித்து ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் கவலை தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் இருந்த அமெரிக்க கூட்டு படைகள் வெளியேறியதை டுத்து, தலிபான் அமைப்பு ஆட்சியை கைப்பற்றியது. கடந்த 1996 முதல் 2001 வரை தலிபான்கள் ஆட்சியில் பல்வேறு பெண் உரிமைகள் மறுக்கப்பட்டன. ஆனால் இம்முறை பெண்களுக்கு முழு சுதந்திரம் வழங்கப்படும் என ஆரம்பத்தில் தலிபான்கள் கூறினர். ஆனால், ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு பெண்களுக்கு எதிராக தங்களின் பழைய கட்டுப்பாடுகளை ஒவ்வொன்றாக விதித்து வருகின்றனர். சில நாட்களுக்கு முன், 6ம் வகுப்பிற்கு மேல் பெண் குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்ல தடை விதித்தனர். இந்த சம்பவத்திற்கு உலகின் பல்வேறு நாடுகள் எதிர்ப்பை தெரிவித்தன. ஆப்கான் தலைநகர் காபூல் மற்றும் பிற மாகாணங்களில் பெண்களுக்கு சாரதி உரிமம் வழங்க தலிபான்கள் தடை விதித்துள்ளதாக சமீபத்தில் கூறப்பட்டது.

இந்நிலையில், ஆப்கானில் பெண்கள் பொது இடங்களில் தலையையும் உடம்பையும் முழுமையாக மறைக்கும் புர்கா உடை அணிய வேண்டும். பெண்கள் தங்களுடைய கண்களை தவிர்த்து முகத்தையும் மறைத்து கொள்ள வேண்டும். தேவை ஏற்பட்டால்தான் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும் என்று அதிரடியாக உத்தர விட்டுள்ளனர்.

இந்த ஆணையை மீறி பெண்கள் யாராவது பொது இடத்தில் தங்கள் முகத்தை மறைக்காமல் சென்றது கண்டுபிடிக்கப் பட்டால் அவர்களுடைய தந்தை அல்லது நெருங்கிய உறவினருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐ. நா. பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது வருமாறு,


ஆப்கானில்பெண்கள்பொது இடங்களில் முகத்தை மறைக்க வேண்டும் என்றும், அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் என்றும் தலிபான்கள் அறிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அளித்த வாக்குறுதிகளையும், சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் கீழ் தலிபான்கள் தங்கள் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்று நான் மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# தாய்வானில் நிலநடுக்கம்

தாய்வானின் கிழக்கு கடற்கரையில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் காரணமாக சீன தைபேயில் வீடுகள், கட்டிடங்கள் குலுங்கின. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகி உள்ளது. ஹுவாலியன் நகரில் இருந்து 90கி.மீ. தொலைவில் 27 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டு இருந்தது. அதாவது கிழக்கு தாய்வான் மற்றும் தென்மேற்கு ஜப்பான் இடையே நிலநடுக்கம் உணரப் பட்டுள்ளது. நிலநடுக்கத்தினால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இதேபோல் ஜப்பானின் யோனாகுனியில் இருந்து தென்மேற்கே 70கி.மீ. தொலைவை மையமாக கொண்டு நிலநடுக்கம் உருவானதாக ஜப்பான் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.6 புள்ளிகளாக பதிவாகி இருந்தது. இதன் காரணமாக கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டதாகவும் ஆனால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட வில்லை என்றும் கூறப்படுகின்றது. இதேபோல் சீனாவின் பிரதான பகுதிகளிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதாக சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சீனக்கடற்கரையில் இருந்து கிழக்கே சுமார் 160 கி.மீ. தொலைவில் தாய்வான் அமைந்துள்ளது.



# சென்னை ஆர்.ஏ.புரத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற தடை விதிக்கப் போவதில்லை

## வழக்கை தள்ளுபடி செய்து உச்சநீதிமன்றம் உத்தரவு



சென்னை ஆர்.ஏ.புரத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற தடை விதிக்கப் போவதில்லை என உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் கோவிந்தசாமி நகர் உள்ளது. இங்குள்ள இளங்கோ தெரு பக்கிங்காம் கால்வாயையொட்டி உள்ளது. இந்த தெருவில் இருந்த 625 ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்ற கோர்ட்டு உத்தரவிட்டது. இதையடுத்து பக்கிங்காம் கரையோரம் இருந்த 366 வீடுகள் அகற்றப்பட்டன. மீதி உள்ள 259 வீடுகளை உடனடியாக அகற்ற கோர்ட்டு உத்தர விட்டது. இதை தொடர்ந்து வருவாய்த்துறை சார்பில் அங்குள்ள வீடுகளில் நோட்டீஸ் ஒட்டப்பட்டது. இந்த நிலையில் போலிஸ் உதவியுடன் இளங்கோ தெருவில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் இடிக்கும் பணி கடந்த வாரம் தொடங்கியது. ஆக்கிரமிப்பு வீடுகளை இடிப்பதை எதிர்த்து அப்பகுதியை சேர்ந்த கண்ணையா என்பவர் நேற்று முன்தினம் தீக்குளித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து குடியிருப்புவாசிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆர்.ஏ.புரத்தில் வீடுகள் இடிக்கப்பட்டமை குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரபட்டுள்ளது. அதில் ஆர்.ஏ.புரம் ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கைக்கு தடை விதிக்க கோரி மனு தாக்கல் செய்யவுள்ளதாகவும், அந்த வழக்கை அவசரமாக விசாரிக்கவேண்டும்எனவும்கோரிக்கைவைக்கப்பட்டது.

இதனை ஏற்ற நீதிமன்றம் ஆக்கிரமிப்பு அகற்றம் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்ற நீதிபதி கான்வில்கர் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஆக்கிரமிப்பு அகற்றத்தால் பாதிக்கப்படுவோருக்கு இடம் தயாராக உள்ளது என தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சென்னை ஆர்.ஏ.புரத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற தடை விதிக்கப் போவதில்லை. 2011ம் ஆண்டு முதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வருகிறது, மாநில அரசு செயல்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டோருக்கு மாற்று இடம் வழங்க வேண்டிய வேலையை அரசு செய்யப்படும். ஆக்கிரமிப்பை அகற்றும் விவகாரத்தில் குறிப்பிட்ட காலம் அவகாசம் வழங்கினால் அதனை சம்பந்தப்பட்ட நபர்கள் கடைப்பிடிக்க வேண்டும். முதலில் காலி செய்வதற்கான நோட்டிசை சம்பந்தப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். மாற்று இடம் வழங்குவதாக பேரவையில் முதல்வர் அறிவித்துள்ளது உறுதி மொழிதானே? என கேள்வி எழுப்பிய நீதிமன்றம், சென்னை ஆர்.ஏ.புரம் ஆக்கிரமிப்பு வழக்கை தள்ளுபடி செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

# தமிழ்நாட்டில் 12 திருக்கோயில்களில் திருப்பணிகள் முடிந்து திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது

## அமைச்சர் சேகர்பாபு தகவல்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி ஒரு மாதத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 12 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெறவுள்ளது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டுகுடமுழுக்குநடத்தப்படவேண்டும். தமிழ்நாட்டில் உள்ள புராதனமான மற்றும் தொன்மையான திருக்கோயில்களை தொன்மை மாறாமல் புதுப்பித்து புனரமைப்புப் பணிக்கான ஒப்புதலுக்கு பரிந்துரை செய்வதற்கு மாநில அளவில் மற்றும் மண்டல அளவில், வல்லுநர் குழுவின் கூட்டம் வாரம் இருமுறை ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்று 200 க்கும் மேற்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகளுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி கடலூர் மாவட்டம், பெரிய கங்கணாங்குப்பம், அருள்மிகு சேமகளத்து மாரியம்மன் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், மேலநத்தம், அருள்மிகு அருந்தபசு அம்மன் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், இரயிலடி, அருள்மிகு சஞ்சீவி ஆஞ்சநேயர் திருக்கோயில், கோவை மாவட்டம், பாப்பநாயக்கன் பாளையம், அருள்மிகு பட்டத்தரசியம்மன் திருக்கோயில், சிவகங்கை மாவட்டம், திரு வேகம்பத்தூர் அருள்மிகு ஏகாம்பரநாத சுவாமி திருக்கோயில், ஆகிய திருக்கோயில்களுக்கு 13.05.2022 அன்றும், விருதுநகர் மாவட்டம், குன்னூர் அருள்மிகு எல்லையம்மன் திருக்கோயில், விருதுநகர் மாவட்டம், வத்ராயிருப்பு நகர், அருள்மிகு கம்மாள கருப்பசாமி திருக்கோயில்,

காஞ்சிபுரம் மாவட்டம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில் ஆகிய திருக்கோயிலுக்கு 15.05.2022 அன்றும், திண்டுக்கல் மாவட்டம், பழனி நகர் அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலுக்கு 27.05.2022 அன்றும், புதுக்கோட்டை மாவட்டம், அருள்மிகு ஆதிமத் தியார்ஜீனேஸ்வரர் திருக்கோயிலுக்கு 09.06.2022 அன்றும், திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி, அருள்மிகு அழகு நாச்சியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது. இதேபோல் ஒவ்வொரு மாதமும் திருப்பணிகள் முடிவுற்ற திருக்கோயில்களுக்கு திருக்குடமுழுக்கு உடனடியாக நடந்த அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் எந்த வித மின்தடையும் இல்லாமல் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது

## அமைச்சர் செந்தில் பாலாஜி விளக்கம்



தமிழகத்தில் எந்த வித மின் தடையும் இல்லாமல் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சட்டப்பேரவையில் பேசிய அவர் தமிழகத்தில் எந்த வித மின்தடையும் இல்லாமல் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மே 1-8 வரை 5,94,000 யூனிட் மின்சாரம், ரூ.12 என்ற அளவில் எக்ஸ்சேஞ்ச் முறையில் கொள்முதல் செய்து மின் தேவை சரிசெய்யப்பட்டது. தமிழ்நாட்டில் உச்சபட்சமாக 16,000 மெகாவாட் மின்தேவை எந்த பிரச்சிசனையும் இன்றி பூர்த்தி செய்யப்பட்டது. ஏப்ரலில் 17 நாள்களும், மே 9 வரை உச்சபட்ச மின் தேவை 16,000 மெகா வாட் எந்த பிரச்சினையும் இன்றி கொடுக்கப்பட்டது.

புறம்போக்கு நிலங்களில் பட்டா இல்லாதவர்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டில் மின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் வெளிமாநிலங்களுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. கடந்தகாலங்களை விட தற்போது கூடுதலாகவே மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எந்த இடத்திலாவது மின் தடை ஏற்பட்டால் பராமரிப்பு பணி அல்லது பழுது காரணமாகவே இருக்கும். எம்.எல்.ஏக்களுக்கு கூடுதல் இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டம் எதுவும் இல்லை எனவும் கூறினார்.



# சென்னை உள்பட 11 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்திற்கு மழை

சென்னையில் 3 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. அசானி புயல் காரணமாக, ஒடிசாவில் 4 மாவட்டங்களில் கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதேபோல அசானி புயல் காரணமாகதமிழ்நாட்டில்33மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்றிரவு மிதமான மழை பெய்தது.

இதனால், வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுவதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சென்னையில் கனமழை காரணமாக சில இடங்களில் தண்ணீர் தேங்கியுள்ளதால் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர். இதேபோல தமிழகத்தின் டெல்டா மாவட்டங்ளிலும், மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. இதேபோல தமிழகத்தின் பல பகுதிகளில் நள்ளிரவு முதல் பலத்த காற்றுடன் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் சென்னையில் 3 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சென்னை உள்பட 11 மாவட்டங்களில் அடுத்த 3 மணி நேரத்திற்கு மழை நீடிக்கும். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோவை, திருப்பூர், வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் மழை நீடிக்கும்.

# சாய்ந்தமருதில் துர்நாற்றம் வீசுவது தொடர்கின்றது காரணம் கண்டறிவதிலும் இன்னும் இழுபறி நீடிப்பு

## களவிஜயத்தில் ஈடுபட்டது பிராந்திய சுகாதாரப்பணிப்பாளர் குழு

(நூருல் ஹுதா உமர், எம்.என்.எம். அப்ராஸ்)

சாய்ந்தமருதில் துர்நாற்றம் வீசுவது தொடர்பில் காரணம் கண்டறிவதில் இன்னும் இழுபறி நிலை நீடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாய்ந்தமருதில் சில வாரங்களாக மாலை நேரத்தில் பலத்த துர்நாற்றம் வீசிவருவதாக மக்கள் தொடர்ந்தும் சுகாதார தரப்பினருக்கு முறைப்பாடுகளை தெரிவித்து வருகின்றனர். இந்தத் தூர்நாற்றம் சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் அமையப்பெற்றிருக்கும் விலங்கறுமனையிலிருந்து வருவதாகவும், மாட்டின் என்புகள் மற்றும் மாட்டின் தோலை தீயிட்டு அழிப்பதனால் வரும் துர்நாற்றமே இது என்றும் கூறப்பட்டது.

இந்தத் துர்நாற்றம் காரணமாக குடியிருப்பு பிரதேசங்களில் பலத்த சங்கடங்களை அனுபவிப்பதாகவும், குறித்த பிரதேசத்திலிருந்து துர்நாற்றம் காரணமாக இடம்பெயர வேண்டிய நிலை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் பிரதேச சுகாதார அதிகாரிகள், கல்முனை மாநகர சபையினர், பொலிஸார், ஊடகங்கள் என பலரும் சென்ற வாரம் முழுவதிலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கள விஜயம் செய்து ஆய்வுகளை மேற்கொண்டும் அங்கிருந்து பாரியளவிலான தூர்நாற்றம் வெளிவரக் காரணிகள் இல்லையென்பதை அறிய முடிந்தது.

இருந்தாலும் தொடர்ந்தும் வெளிவரும் துர்நாற்றத்திற்கான காரணம் கண்டறிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்த நிலையில் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களினால் முறைப்பாடொன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தலையிட்டு தீர்வை பெற்றுத்தரவேண்டும் என்று பொதுமக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டமைக்கு அமைய கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தலைமையிலான சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை உயரதிகாரிகள் அடங்கிய குழுவினர் கள விஜயமொன்றை நேற்று மதியம் மேற்கொண்டு விலங்கறுமனை நிலையை ஆராய்ந்தனர்.





இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்ட நேரம் விலங்கறுமனையில் பாரியளவிலான துர்நாற்றம் வீசுவதற்கான எவ்வித விஞ்ஞான ரீதியிலான காரணங்களுமில்லை என்பதை தான் கண்ணுற்றதாகவும், இந்த விஜயத்தின் மூலம் எவ்வாறு குறித்த விலங்கறுமனையை மேலும் சிறப்பாகவும், மேம்பட்ட சுகாதார வழிமுறைகளை கையாள்வதன் மூலம் திறன்பட கொண்டு நடத்த முடியும் என்பது தொடர்பிலும் அறிக்கையொன்றை தயாரித்து கல்முனை மாநகர சுகாதாரப் பிரிவினரின் ஊடாக சிறப்பாக செய்ய வழிவகைகளை செய்ய எண்ணியுள்ளார் எனப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் களவிஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், இந்த விலங்கறுமனை பிரதேசத்திற்குத் தேவையான ஒன்றாகும். இந்த விலங்கறுமனை இல்லாதிருந்திருந்தால் பலத்த சுகாதார சீர்கேடுகளை இந்தப் பிராந்தியம் சந்திருக்க நேரிட்டிருக்கும். இருந்தாலும் அரச சுகாதார வழிகாட்டல்கள், நவீன தொழிநுட்பம் மற்றும் உயரிய சுகாதார வழிகாட்டல்களுடன் இந்த விலங்கறுமனை நடத்திச் செல்லப்பட வேண்டும். அதற்கான சகல ஆலோசனைகளையும், மேற்பார்வைகளையும் செய்ய கல்முனை மாநகர சபையுடன் இணைந்து எங்களின் பணிமனை எப்போதும் தயார் நிலையில் உள்ளது என்றார்.

விலங்கறுமனை நடவடிக்கைகளை ஒழுங்காக செய்வதற்கு சுகாதாரத்துறையினர் முன்வைக்கும் தீர்வை ஏற்று அதன்படி நடக்க தயாராக இருக்கிறோம் என விலங்கறுமனை உரிமையாளரான மீராசாஹிப் அஷ்ரப் சுகாதார. குழுவினரிடம் தெரிவித்தார். நீண்டநேரமாக ஆய்வுசெய்த சுகாதாரத்தரப்பினர் விலங்கறுமனை நடவடிக்கை தொடர்பில் பல்வேறு ஆலோசனைகளை விலங்கறுமனை ஊழியர்களுக்கு இதன்போது வழங்கினர்

# கல்முனை தமிழர் பிரதேச செயலகத்தின் காணி பதியும் அதிகாரமும் பறிக்கப்பட்டது

## மாநகர சபை உறுப்பினர் ராஜன் கண்டனம்

(காரைதீவு நிருபர் சகா)

கல்முனை மாநகரத்தில் தமிழர்களின் இருப்பை இல்லாதொழிக்கும் சதித்திட்டத்தின் ஓரங்கமாக காணி பதியும் உரிமை கச்சிதமாக கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. இது ஒருபோதும் இன உறவை வலுப்படுத்த உதவாது. மாறாக விரிசல்களை ஏற்படுத்தும்.இதனை வன்மையாக கண்டிக்கிறேன்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்முனை காணி பதிவகத்தில் காணி மற்றும் ஆவணங்கள் பதிவு நடவடிக்கைகள் பிரதேச செயலக ரீதியில் 2012 இல் இருந்து பதிவு செய்யப்பட்டு வந்தது.

13 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி கல்முனை காணி பதிவகம் இயங்கி வருகிறது.


காணி பதிவகத்தின் கீழ் கல்முனை வடக்கு செயலக பிரிவின் கீழ் உள்ள 29 கிராம சேவகர் பிரிவில் உள்ள காணிகள் இதுவரை காலமும் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவின் பதிவு செய்யப்பட்டு வந்தது.

கல்முனையின் இன வாதத்தையும், இன குரோதத்தையும் விதைத்து அரசியல் செய்து வரும் வங்குரோத்து அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான அழுத்தத்தினால் கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உரிய பதிவு நடவடிக்கை அனைத்தும் கல்முனை தெற்கு பிரதேச செயலக பிரிவின் கீழ் மாற்றப்பட்டு உள்ளது. பதிவாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்திலிருந்தும் தமிழ்பிரதேச காணிப் பதிவுகளை அங்கு பதியவேண்டாம். இனிமேல் எமது செயலகத்தின் பெயரின் கீழ் மட்டுமே பதியவேண்டும் என பதிவாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாம்.

இந்த விடயம் கல்முனையில் தமிழ் முஸ்லிம் இன விரிசலை மேலும் வலுப்படுத்தி அரசியல் ஆதாயம் பெறவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.உறவு கொண்டாடும் தலைமைகள் இது விடயத்தில் கவனம் எடுப்பார்களா? – என்று உள்ளது.



# ஹிஸ்புல்லாவின் வீட்டுக்கு காத்தான்குடியில் கல்வீச்சு

முன்னாள் அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் காத்தான்குடியிலுள்ள வீட்டின் மீது நேற்று திங்கட்கிழமை மாலை கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காத்தான்குடி 3 ஆம் குறிச்சி ஊர் வீதியிலுள்ள முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் வீட்டின் மீது மாலையில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தபோது இந்தக் கல் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் வீட்டின் முன் பகுதியிலுள்ள ஜன்னல் கண்ணாடியொன்று உடைந்து சேதமடைந்துள்ளது..

இச் சம்பவத்தையடுத்து பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

# கிழக்குப் பல்கலை மாணவர்கள் நேற்றிரவு ஆர்ப்பாட்ட ஊர்வலம்

காலிமுகத்திடலில் கோட்டா கோ ஹோம் கம மீது இடம்பெற்ற தாக்குதலை கண்டித்து மட்டக்களப்பு, ஊறணி சந்தியில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து ஊர்வலமாக ஆரம்பித்து பிள்ளையாரடி வரையும் சென்று அங்கு சுமார் அரை மணிநேரம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து, இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் வீட்டிற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவார்கள் என்ற அச்சத்தையடுத்து, அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# இத்தனை நிலைமைக்கும் காரணமான ஜனாதிபதி உடன் பதவி விலகவேண்டும்!

## சிறிதரன் எம்.பி. ஆக்ரோஷம்



இத்தனை நிலைக்குக் காரணமான ஜனாதிபதியே முதலில் பதவி விலகியிருக்க வேண்டும் எனவும் சமகால நிலை தொடர்பில் தமிழ் இளைஞர்கள் அமைதி காக்கவேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழரசு கட்சி அலுவலகத்தில் சமகால நிலை தொடர்பில் அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது நாடு அலங்கோலமான மிக மோசமான நிலையை எட்டியிருக்கின்றது. வன்முறை உச்சத்தைத் தொட்டிருக்கின்றது. ராஜபக்ஷக்களின் குண்டர்கள் நியாயமான போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் இடங்களுக்குள் புகுந்து அவர்களைத் தாக்கியிருக்கின்றார்கள்.

அதனால் கோபம் கொண்ட எமது மக்கள் மாவட்டங்கள் தோறும் வன்முறைகளைக் கையில் எடுத்திருக்கின்றார்கள். சட்டம் ஒழுங்கு நிலைகுலைந்திருக்கின்றது.

இந்த நாடு மிக மோசமான நிலைக்குள் தள்ளிச்சென்றுள்ள நிலையில், வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள மக்களிடம் நான் ஓர் அன்பான வேண்டுகோளை விடுக்கின்றேன்.

நாங்கள் இந்த இடைக்காலத்தில் நிதானமாகவும், பொறுமையாகவும் எங்களது நிலைகளைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக காலிமுகத்திடலில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரை தமிழ் இளைஞர்கள் கடைப்பிடித்த அமைதியும் நிதானமும் எங்களுக்கு ஒரு பெரு வெற்றியைத் தந்திருக்கின்றது. – இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# கர்ப்பிணி பெண் உட்பட்ட மாற்றுத்திறனாளிமீது பொலிஸார் கண்மூடித்தனமான தாக்குதல்கள்!

## கிளிநொச்சி இராமநாதபுரத்தில் சம்பவம்



கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் கர்ப்பிணி பெண் உட்பட்ட மாற்றுத்திறனாளி ஆகியோர் மீது பொலிஸார் கண்மூடித்தனமான தாக்குதல் மேற்கொண்டதையடுத்து பொலிஸார் மீது பொதுமக்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில உள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து நேற்று (திங்கட்கிழமை) மாலை ஓட்டோவில் சென்ற பொலிஸார் குறித்த வீட்டில் கசிப்பு இருப்பதாகத் தெரிவித்து வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞரை கைது செய்ததால் பொலிஸாருக்கும் வீட்டிலிருந்தவர்களுக்குமிடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த வீட்டிலிருந்த கர்ப்பினிப் பெண் மற்றும் நோய்வாய்ப்பட்ட மாற்றுத்திறனாளி கைது செய்யப்பட்ட இளைஞரின் தாயார் ஆகியோர் மீதும் தாக்குதல் மேற்கொண்டனர் எனவும், இதனால் கிராம மக்கள் ஒன்று கூடி பொலிஸார் மீதும் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் உயரதிகாரிகள் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தமை குறிப்பிடத்க்கது.

# 4 மாதத்தில் ஒரு லட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேற்றம்!

இலங்கையை விட்டு இந்த வருடத்தில் இதுவரையில் ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் வெளிநாட்டு வேலைக்காக வெளியேறியுள்ளனர் என உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்குச் சென்றுள்ளதோடு, எதிர்வரும் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்பில் வளர்ச்சியடைவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக அதன் செயலாளர் எம்.எப்.எம். அர்ஷாத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் 2021 வருடாந்த அறிக்கையின் பிரகாரம், கடந்த வருடம் வேலைக்காக வெளிநாட்டுக்குச் சென்ற இலங்கையர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 795 ஆக பதிவாகியுள்ளதாகவும் இது முந்தைய ஆண்டை விட 127 சதவீதம் அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த வருடம் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பொலிஸ் ஊரடங்கினையும் பொருட்படுத்தாது மலையகத்தில் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!






கொழும்பு காலிமுகத்திடல் மற்றும் கண்டி பகுதியில் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்று வந்த கோட்டா கோ கம அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு மஹிந்த ராஜபக்ஷ ஆதரவாளர்கள் நேற்று (திங்கட்கிழமை) தாக்குதலை மேற்கொண்டதைத் தொடர்ந்து நாடெங்கிலும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கை பொலிஸ் ஊரடங்கினையும் பொருட்படுத்தாது இடம்பெற்றது.

இந்நிலை இந்தத் தாக்குதலை கண்டித்தும் அரசாங்கத்தை வெளியேறக் கோரியும் மலையகத்திலும் பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஹற்றன் மற்றும் கொட்டகலை பகுதியில் குறித்த தாக்குதலைக் கண்டித்தும் அரசாங்கத்தை வெளியேற கோரியும் பொலிஸ் ஊரடங்கையும் பொருட்படுத்தாது கறுப்புக் கொடி ஏந்தி 'கோட்டா கோ ஹோம்' என்று கோமிட்டவாறு ஹற்றன் மணிக்கூண்டு போபுரத்தின் அருகில் ஆரம்பித்து மல்லியைப்பூ சந்தி வரை சென்று மீண்டும் திரும்பி நகரை நோக்கி வரும்வகையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் நகரில் உள்ள வர்த்தகர்கள், இளைஞர்கள் கலந்து கொண்டிருந்தமையுடன், மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகியதைத் தொடர்ந்து பொது மக்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.05.2022இல் வெளியிடப்பெற்றது.